Panchayat Union Council, Pallipet

* 246 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the **Minister for Local Administration be pleased to state whether the Hon. Minister is aware of the fact that there is no Council meeting hall in Panchayat Union Council Office at Pallipet (Chingleput district)?**

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம்.

திரு. கே. விநாயகம் : இந்தப் பள்ளிப்பட்டு பஞ்சாயத்து யூனியன் பல நாட்களுக்கு முன்னரே ஏற்பாடு செய்து இருந்தும் கூட இதுவரை அவர்களுக்கு கிராண்ட் கொடுக்காமல் போனதினாலே அங்கே மீட்டிங் ஹால் கிடையாது. இனியாகிலும் அரசாங்கம் அவர்களுக்குக் கொடுக்கிற தொகையைத் தயவுசெய்து கொடுத்து அதைக் கட்டி முடிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பொருளாதார நிலை இடம் கொடுத்தால் அது நிச்சயம் கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

2. கவன ஈர்ப்பு

கீழ் பவானித் திட்டப் பகுதியில் தண்ணீர் தண்டத் தீர்வை விதிப்பும், மேம்பாட்டு வரி வசூலிப்பும்.

THIRU P. G. KARUTHIRUMAN: Sir, I call the attention **of the Hon. Minister for Food to a matter of urgent public importance, namely, the collection of penalty for raising paddy crops and collection of betterment tax in Lower Bhavani Project** area of Gobichettipalayam taluk although in similar areas of Erode and Bhavani taluks the assessment of penal levy has been cancelled and collection of betterment tax has been postponed in view of bad **monsoon year.**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு, பவானி தாலூகாக்களைச் சேர்ந்த கீழ் பவானித் திட்டப்பகுதியிலுள்ள நிலங்களின் மீது தண்ணீர் தண்டத்தீர்வை விதிப்பதும், மேம்பாட்டு வரி வசூலிப்பதும் சட்ட சபை உறுப்பினர்களில் சிலர் குறிப்பாக கேட்டுக்கொண்டதன் மேல் நிறுத்தப்பட்டுள்ளது. நெற்பயிர் விளைவிப்பதற்கான தண்டத் தீர்வையை நீக்குவது குறித்து அல்லது மேம்பாட்டு வரி வசூலை ஒத்திப்போடுவது குறித்து எந்த ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. வருவாய்த்துறைப் பெருவாரியம் மூலமாக கோயம்புத்தூர் மாவட்டக் கலெக்டரின் அறிக்கை வரும் வரையிலும், அதன்மீது